சுகாதாரம் நாசம் ஆகிவிட்டது என்று அர்த்தம். கோவை நகரம் மாநகராட்சியாக ஆன பிறகு கூட அந்த துப்புரவுப் பணியாளர்களுடைய எண்ணிக்கை அதிகப்படுத்தப்படவில்லை. பல ஆயிரக்கணக்கான துப்புரவுத் தொழிலாளர்கள் அங்கே தேவை. 4,5 ஆயிரம் பேர் தேவை என்று நினைக்கிறேன். எவ்வளவு பேர் என்று தெரியவில்லை.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் கேட்டு இருக்கிற இந்த அம்பத்தூர் நகரீயம், அது நகரீயமாக ஆனதற்கு பிறகு இதுவரையில் எவ்வளவு பேர்களை அதிகப்படுத்தியிருக்கிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூரில் தற்போது 184 துப்புரவுத் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அம்பத்தூர் நகரீயத்தைப் பொறுத்தவரையில் 267 தொழிலாளர்களைத் தோற்றுவிக்க நகராட்சியிலிருந்து கருத்துரு வந்தது. ஆனால் முழுவதுமாக தோற்றுவிப்பதற்கு ரூ. 18 இலட்சம் செலவாகும். தற்சமயம் அந்த நகராட்சியிடம் ரூ. 18 இலட்சம் கொடுப்பதற்கு வசதியிருக்கிறது என்றாலும், எதிர்காலத்திலே பாதிப்பு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதைக் கருத்தில்கொண்டு, மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று அந்த நகராட்சி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கதர், கிராமத் தொழில் வாரியம் மூலம் செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கிய கடைகள்.

280 (*வினா எண். 11004) திரு. கே. உச்சி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர், கிராமத் தொழில் வாரியம் மூலம் 1985-ம் ஆண்டு, செருப்பு தைக்கும் தொழிலாளர்கள் எவ்வளவு பேருக்கு புதிய கடைகள் வழங்கப்பட்டன?

(ஆ) நடப்பு ஆண்டில் (1986) எத்தனை தொழிலாளர்களுக்கு புதிய கடைகள் அமைத்துக் கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) 1985 ஆம் ஆண்டில் காலணிப் பணிக் கூடங்கள் வழங்கப்படவில்லை.

(ஆ) 1986 இல் 750 காலணித் தொழிலாளர்களுக்கு காலணி பணிக்கூடங்கள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணி தைக்கும் அந்தத் தொழிலாளர்களுக்கு இந்தக் கடைகள் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதையும் அந்தத் தொழில் செய்கின்றவர்களுக்கு இன்னும் அதிகமான அளவில் கடைகளை விஸ்தரிக்கும் திட்டம் ஏதேனும் உண்டா என்பதையும் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணி தொழில் செய்கின்ற அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு 'காப்ளர் பங்க்' என்ற வகையில் அவர்களுக்கு கடன் என்ற அடிப்படையில் வழங்காமல், முழுமானியத் தொகையாக கொடுக்கப்படுகிறது. அது கிட்டத் தட்ட நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அதற்காக விண்ணப்பித்த அநேக தொழிலாளர்களுக்கு அந்தக் கடைகள் கொடுக்கப்படவில்லை என்று மனுக்கள் உங்களிடம் வந்துள்ளதா? ஆம் எனில் அதன் அடிப்படையில் அதிக அளவில் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, அப்படி மனுக்கள் எதுவும் வரவில்லை. ஆனால் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், உதகமண்டலத்தில் 20 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கான கடைகள் மாநகராட்சி, நகராட்சியிலிருந்து தான் வழங்கப்படுகிறது. அதுபோன்று பேரூராட்சிகளில் அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு கடைகளைக் கொடுக்கஅரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? இதுவரையில் விண்ணப்பித்து, கொடுக்கப்படாமல் எவ்வளவு கடைகள் இருக்கின்றன? அவர்களுக்கு கடைகளைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1983–84 ஆம் ஆண்டிலிருந்து தான் முதன் முதலாக கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிலே முதலில் 500 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக கிட்டத்தட்ட ரூ. 36,50,000 வழங்கப்பட்டது. 1986–87-ல் 750 பேர்களுக்கு வழங்கப்பட்டு, கிட்டத்தட்ட இதுவரையில் ரூ. 63,76,000 செலவிலே வழங்கப்பட்டிருக்கிறது.

நகராட்சியைப் பொறுத்தவரையில், அதேபோன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்து அனுப்புகின்ற அந்த இடங்களுக்கு அந்தத் திட்டத்தை செயல்படுத்திக்

கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியின் விவரம் தற்போது எனிடம் இல்லை. அதற்காக தனியாக ஒரு கேள்வி கேட்டால் விளக்கம் அளிக்கப்படும்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதிதிராவிடத் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்களுக்கு இத்தகைய கடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும். 1987–88 ஆம் ஆண்டில் புதிய கடைகள எத்தனை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே. தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லப்படும்.

திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அந்தப் பெட்டிக் கடைகளை, அவர்கள் ரோடு ஓரங்களில் வைத்திருக்கிறார்கள். ஆனால் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் அடிக்கடி அவற்றை அகற்றிவிடுகிறார்கள். அதனால் செருப்புக் கடை வைத்திருக்கின்ற அந்த ஏழைத் தொழிலாளர்களின் தொழில் பாதிக்கப்படுகிறதே, அதைப்பற்றி அரசுக்கு ஏதேனும் தகவல் வந்திருக்கிறதா? அப்படியானால் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய திட்டம் 'காப்ளர் பங்க்' என்ற வகையில் அந்தத் தொழில் செய்கின்றவர்களுக்கு கடைகளைக் கொடுப்பது தான். அவர்கள் வாங்குகின்ற பணத்திற்கு அவர்களாக இடம் பார்த்து, கடைகளை வைப்பது என்ற பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. ஆனால் உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற தகவல் ஏதும் எங்களிடம் வரவில்லை.

(முற்பகல் 10.50)

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு தலைநாயகர் அவர்களே தமிழக அரசினுடைய திட்டத்தின் மூலமாக இலவச செருப்பு அளிக்கின்ற திட்டம் கதர் வாரியத்தின் மூலமாக நிறைவேற்றப்படுமா? அப்படி வழங்கப்படுகின்றபோது மக்கள் மத்தியிலிருந்து வேலை வாய்ப்பிற்கான விண்ணப்பங்களை பெறுகின்ற சூழ்நிலையை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆண்டு செருப்பு கொடுக்கின்ற அந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரை கதர் துறைதான் அதற்கு

சம்பந்தப்பட்ட துறையாகும். இங்கே நாங்கள் ஒதுக்குகின்ற பணத்தை, கதர்த்துறைக்கு ஒதுக்குகின்றோம். அப்ளிகேஷன் எல்லாம் அவர்களுடைய துறையில்தான் கொடுக்க வேண்டும் என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். பி. மணவாளன்: தலைவர் அவர்களே, செருப்பு தைக்கும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் பணிக்கூடம் ஒன்றின்மதிப்பு எவ்வளவு? அதில் மைய, மாநில அரசினுடைய மானிய பங்கு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்; தலைவர் அவர்களே, முதலிலே 7,300 கொடுக்கப்பட்டது. 1986-87ல் அது போதாது என்று 8,500 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டமே ஸ்பெஷல் காம்போனென்ட் பிளான் என்ற திட்டத்தின் கீழ் மைய அரசினுடைய நிதியோடு வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காலணி தைக்கும் தொழிலாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆதிதிராவிடர் நலத்துறை மூலமும், அதேபோல தச்சுத் தொழில் செய்பவர்களுக்கு மானியம் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதற்கு தேர்ந்தெடுக்கும்போது அரசு ஊழியர்கள் அல்லாதவர்கள் அடங்கிய குழு ஒன்று ஏற்கனவே செயல்பட்டு வந்தது. அப்படிப்பட்ட குழு இப்போது இல்லை என்று தெரிகிறது. அப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை மாவட்டத்திற்கு ஒன்று அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும். அது பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

மலைவாழ் மக்களுக்கு தனிக் கடன் நிவாரணச் சட்டம்.

281—(*வினா எண். 11940) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்களுக்கு என்று தனிக் கடன் நிவாரணச் சட்டம் இயற்ற அரசிற்கு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கு இயற்றுகின்ற நிவாரணச் சட்டத்தைப்போல தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பல இடங்களில் கடன் வாங்கிவிட்டு தொழிலை முறையாக நடத்த தெரியாத காரணத்தினாலும், உதவிகள் சரியாக கிடைக்காத காரணத்தினாலும் பல